## மயிலாப்பூரில் எஸ்.வி.வெங்கட்ராமன் வாழ்ந்த தெருவிற்கு அவரது பெயர் சூட்டப்படும்!

# நாடகத்துறையில் நடிகர் எஸ்.வி.சேகர் மிகப்பெரிய சாதனை படைத்துள்ளார்!

## ‘நாடகப் பிரியா’ குழுவின் 50 ஆம் ஆண்டு விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, ஜன. 22 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.1.2025) சென்னை, ஆழ்வார் பேட்டை, ‘நாரதகான சபா’வில் நடைபெற்ற நாடகப்பிரியா குழுவின் 50ஆம் ஆண்டு விழா, நாடகப்பிரியா நிறுவனத் தலைவர் எஸ்.வி.வெங்கட்ராமன் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் நாடகப்பிரியாவின் 7000-வது நாடக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்.**

**அவ்வுரையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “நாடகத் துறையில் மிகப் பெரிய சாதனை படைத்தவர் நடிகர் எஸ்.வி.சேகர்” என்றும், “எஸ்.வி. சேகரின் கோரிக்கையை ஏற்று, அவரது தந்தையாரும் ‘நாடகப் பிரியா’ குழுவின் நிறுவனருமான எஸ்.வி.வெங்கட்ராமன் அவர்கள், மயிலாப்பூரில் வாழ்ந்த தெருவிற்கு அவரது பெயர் சூட்டப்படும்” என்றும் குறிப்பிட்டார்.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

நாடகப்பிரியா அமைப்பின் நிறுவனத் தலைவர் எஸ்.வி.வெங்கட்ராமன் அவர்களின் நூற்றாண்டு விழா - எஸ்.வி.சேகரின் 7000வது நாடக விழாவில் பங்கெடுத்து வாழ்த்துச் சொல்லக் கூடிய அல்லது சில நிமிடங்கள் உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்! இந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய ‘நம்முடைய சேகர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரும் பேசும்போது நம்முடைய முதல்வர், நம்முடைய முதல்வர்’ என்று சொன்னார். அதனால், ‘நம்முடைய சேகர், நம்முடைய சேகர்’ என்று நானும் சொல்கிறேன்.

நூற்றாண்டு விழா காணக்கூடிய எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்களைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கே வந்திருக்கக்கூடியவர்கள் பலர் அவரைப் பற்றி முழுமையாக அறிந்திருக்கக்கூடியவர்கள்தான். நாடக உலகில் கொடி கட்டிப் பறந்தவராக விளங்கியவர் அவர்! 1940 முதல் ஆயிரக்கணக்கான நாடகங்களை அவர் நடத்தியிருக்கிறார். அதிலும் குறிப்பாக பெண் வேடமிட்டு நடித்திருக்கக்கூடியவர் அவர்.

### புகழ்மாலைகள் சூட்டும் அளவுக்கு சாதனைகள் புரிந்தவர்!

திரைப்படக் கல்லூரியில் வருகைதரு பேராசிரியராக இருந்து பணியாற்றியிருக்கிறார். தமிழ் நாட்டின் முதல் தொலைக்காட்சித் தொடரான ‘வண்ணக் கோலங்கள்’ தொடரின் தயாரிப்பாளராகவும் இருந்து கலைப் பணியாற்றியிருக்கிறார்.

‘ஃபெப்சி’ என்ற திரைப்பட யூனியன் பெயரை இவரும், எம்.பி.சீனிவாசன் அவர்களும் சேர்ந்துதான் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இரத்த தானம் செய்வதில் மாபெரும் சாதனைகளைப் படைத்தவர் நம்முடைய எஸ்.வி.வெங்கட்ராமன் அவர்கள். இப்படி ஒரு நீண்ட பட்டியலை அவரைப் பற்றிச் சொல்லமுடியும். இப்படிப்பட்ட புகழ்மாலைகளைச் சூட்டக்கூடிய அளவிற்கு சாதனைகளைச் செய்திருக்கக்கூடிய காரணத்தால்தான், இன்றைக்கு நூற்றாண்டு விழாவை இவ்வளவு சிறப்போடு, எழுச்சியோடு நாம் இங்கே கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்!

நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்கள் ஓரிரு மாதங்களுக்கு முன்பு, என்னைப் பார்க்கவேண்டும் என்று என்னிடத்தில் தேதி கேட்டு, அண்ணா அறிவாலயத்திற்கு வந்தார். அங்கே என்னிடத்தில் ஒரு கோரிக்கையை வைத்தார். கோரிக்கை என்று சொல்லமாட்டேன், ஒரு உத்தரவை என்னிடத்தில் வைத்தார். என்னவென்று கேட்டால், “இப்படி ஒரு நிகழ்ச்சி நடத்தப் போகிறோம். 7 ஆயிரமாவது நாடகத்தை உங்கள் தலைமையில் நடத்த முடிவு செய்திருக்கிறோம். என்னுடைய தந்தையாரின் நூற்றாண்டு விழாவை அந்த நிகழ்ச்சியில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். என்னுடைய நாடகக் குழுவினர் அத்தனை பேருக்கும் நீங்கள் கேடயம் வழங்கிடவேண்டும். நீங்கள் வந்து பேசக்கூட வேண்டாம். 10 நிமிடம் நாடகத்தைப் பார்த்துவிட்டு, கேடயம், பரிசுகளை மாத்திரம் வழங்கிவிட்டுப் போனால் போதும்” என்றுதான் என்னிடத்தில் அவர் சொன்னார்.

“நான் உடனே சொன்னேன், “நான் முதலமைச்சரான பிறகு இது போன்ற நாடக விழாக்கள், தனிப்பட்ட முறையில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிக்கு நான் அதிகமாகப் போவதில்லை. அரசு நிகழ்ச்சி, கட்சி நிகழ்ச்சி இப்படித்தான் நான் போகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது; அதற்கே நேரம் போதவில்லை. ஏனென்றால், அத்தகைய ஒரு நிகழ்ச்சிக்குப் போய்விட்டால், அடுத்த நிகழ்ச்சிக்கு என்னை அழைக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும்” என்று நான் அவரிடத்தில் சொன்னபோது, “இல்லை, இல்லை நீங்கள் கட்டாயமாக வந்துதான் தீர வேண்டும்” என்று உத்தரவு போட்டார். அவர் உத்தரவை என்னால் மீறமுடியவில்லை. அதனால்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு நான் மகிழ்ச்சியுடன் வந்திருக்கிறேன்; நன்றியோடு வந்திருக்கிறேன்.

ஏனென்றால், நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்கள் எங்கிருந்தாலும், எந்தக் கட்சியில் இருந்தாலும், இப்போது அவர் எந்தக் கட்சியில் இருக்கிறார் என்று தெரியாது; நம்ம கட்சி; ஏனென்றால், தலைவர் அவர்கள், “நான் என்றால் உதடுகள் ஒட்டாது. நாம் என்றால்தான் உதடுகள் கூட ஒட்டும்” என்று கூறுவார். அதனால்தான் இன்றைக்கு நானும் இங்கு மகிழ்ச்சியோடு வந்திருக்கிறேன்.

நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்கள் தன்னுடைய தந்தையாரைப் போலவே, கலையுலகச் சேவை ஆற்றியவர், ஆற்றிக் கொண்டிருக்கக்கூடியவர். தொடர்ந்து ஆற்றப்போகிறவர். அதனால்தான், இன்றைக்கு அவரை வாழ்த்த நாமெல்லாம் இங்கே கூடியிருக்கிறோம்!

எஸ்.வி.சேகர் விழாவில் இந்த மு.க.ஸ்டாலின் கலந்து கொள்வதில் யாரும் ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லை. யாரும் வியப்படையவும் தேவையில்லை. நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்களைப் பொறுத்தவரைக்கும், இதுவரை 25 நாடகங்கள் எழுதி, அவற்றை ஏழாயிரம் முறை அரங்கேற்றி இருக்கிறார். இன்றைக்கு ஏழாயிரமாவது நாடக விழாவை அவர் நடத்திக் கொண்டிருக்கிறார்.

### தலைவர் கலைஞர் மற்றும் என் மீது எஸ்.வி.சேகர் கொண்ட கலைப்பாசம்!

இதற்கு முன்னால், 3,500வது நாடக விழாவையும், அதற்குப் பிறகு 5 ஆயிரத்து 600-வது நாடக விழாவையும் முத்தமிழறிஞர் - தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துத்தான் அவர் நடத்தினார். இன்றைக்கு ஏழாயிரமாவது நாடகத்தை அவருடைய மகன் ஸ்டாலினை அழைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்.

கலைஞர் மீதும், என் மீதும் அளவு கடந்த பாசமுடையவர் நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்கள். பாசம் என்றால், அது அரசியல் பாசம் அல்ல; கலைப் பாசம்! அதுதான் முக்கியம். இந்தக் கலைப் பாசம் காலத்தால் அழியாதது. அழிக்க முடியவே முடியாது. இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எஸ்.வி.சேகர் அவர்களும் எங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்தான். எங்கள் குடும்பம் என்றால் கலைக் குடும்பம். அவர் நடத்திய நாடகத்தின் தலைப்பு ‘அதிர்ஷ்டக்காரன்’. இப்போது மூன்றாவது முறையாக விழா நடத்தி ‘ஹாட்ரிக்’ அடித்த அதிர்ஷ்டக்காரன் மீது அவர். அவருக்கு அதிர்ஷ்டத்தின் மேல் எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ, அதைபோல என்னைப் பொறுத்தவரைக்கும் உழைப்பின் மீது எனக்கு நம்பிக்கை அதிகம் உண்டு;

இங்கு பேசும்போது அவரே சொன்னார். தலைவர் கலைஞர் அவர்களுக்கு எஸ்.வி. சேகர் மீது மதிப்புண்டு; பாசமுண்டு. பற்றுண்டு. அதேபோல, எஸ்.வி.சேகர் மீது கலைஞருக்கும் பற்றுண்டு, பாசமுண்டு, மதிப்புண்டு. ஏனென்றால், பல நேரங்களில் பார்த்திருக்கிறேன். அவர் வீட்டிற்கு வரும்போதெல்லாம் ‘அப்பாயிண்ட்மெண்ட்’ ஏற்கனவே கொடுத்து காத்திருக்கிறவர்களை எல்லாம் உட்கார வைத்துவிட்டு, எஸ்.வி.சேகர் வந்துவிட்டார் என்றால், அவரைத்தான் முதலில் அழைத்துப் பேசுவார். அதேபோல, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் போது கூட, அவர் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவர் பெட்டிஷனையோ, மனுவையோ கொண்டு வந்து தலைவரிடத்தில் வழங்கும்போது, அதை புன்சிரிப்போடு வாங்கிக்கொண்டு, உடனே தன்னுடைய உதவியாளரை அழைத்து, “அதை உடனே செய்து கொடுங்கள்; அதை என்னவென்று பாருங்கள்” என்று உத்தரவிடுவார். அந்த நேரத்தில் எங்களுக்கெல்லாம் கூட சற்று கோபம் வரும். அந்த அளவிற்கு எஸ்.வி.சேகர் அவர்கள் மீது தலைவர் கலைஞர் அவர்களுக்கு பற்றும், பாசமும் உண்டு.

இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் நம்மோடு இல்லை என்று சொன்னாலும், அவர் மீதான பாசவுணர்வோடுதான் இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன்; கருதுகிறேன். அதுதான் உறுதி.

கட்சிகள் மாறும்போது, கொடிகளின் நிறம் மாறலாம்; ஆனால் மனிதருடைய நிறங்கள் மாறக்கூடாது, அதற்கு உதாரணமாக நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்களை தைரியமாக நாம் சொல்லமுடியும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், எந்தக் கட்சியில் அவர் இருந்தாலும், துணிச்சலாக எதையும் எடுத்துச் சொல்லக்கூடிய, விமர்சனம் செய்யக்கூடிய ஆற்றல் அவருக்குண்டு. இப்போது கூட யாரைப் பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்த நாடகத்தில் சில காட்சிகளைப் பார்த்தோம். இதையெல்லாம் பார்க்கின்றபோது, 2026 தேர்தலுக்கு இவரைப் பயன்படுத்திக் கொண்டால் போதும். வேறும் ஒன்றும் தேவையில்லை என்று கூட தோன்றுகிறது.

### எஸ்.வி.சேகருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கிய ‘தத்துவப்பிள்ளை’ பட்டம்!

1996 செப்டம்பர் 18-ஆம் தேதி எஸ்.வி.சேகர் அவர்களின் 3,500வது நாடக விழா நடந்த போது, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அதில் கலந்து கொண்டார். அதில் எஸ்.வி.சேகர் போட்ட நாடகத்தின் தலைப்பு என்னவென்றால் “தத்துப்பிள்ளை”. அதில் கலந்து கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்த்துகின்றபோது, “சேகர் ஒரு தத்துவப் பிள்ளை” என்று வாழ்த்தினார். “தத்துப்பிள்ளை” நாடகத்தில் நடித்த எஸ்.வி.சேகருக்கு “தத்துவப் பிள்ளை” என்று ஒரு பட்டத்தை வழங்கினார்.

அடுத்து, 5 ஆயிரத்து 600-ஆவது நாடக விழா 2010 மே 7-ஆம் தேதி நடந்தபோதும் தலைவர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு பாராட்டினார்! அப்போது எஸ்.வி.சேகர் அவர்கள் போட்ட நாடகத்தின் தலைப்பு, ‘அல்வா’- இதே நாரதகான சபையில்தான் அந்த நாடகம் நடந்தது. அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்த நானும் அந்த நாடக விழாவில் கலந்து கொண்டேன். ‘அல்வா’ நாடகத்தையும் நான் பார்த்தேன். ‘டைமிங்’காக டயலாக் பேசுவதில் அவருக்கு ஈடு இணை யாரும் கிடையாது. அந்த அளவிற்கு எஸ்.வி.சேகர் பேசுவார். 14 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்களை இப்போது சொல்லும் போது கூட இப்போது இருக்கின்ற அரசியலுக்கு எப்படி அவை பொருந்துகிறது என்று பாருங்கள். அதுதான் அந்தக் கலையினுடைய நுணுக்கம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

### எஸ்.வி.சேகர் உள்ளத்தில் ‘கலைஞர்’

“டைமிங்கைத் தாண்டி, ரைமிங்-காக டயலாக் பேசுவதில் நம்முடைய எஸ்.வி.சேகர் ஒரு பெரிய கில்லாடி” என்று அந்த விழாவில் நான் சொன்னேன். எஸ்.வி.சேகர் நாடகத்தில் மட்டும் அல்ல, நேரிலும் எல்லோரையும் சிரிக்க வைக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றவர்.

எம்.எல்.ஏ.வாக இருக்கும் போது அங்கிருக்கும் சட்டமன்ற உறுப்பினர் எல்லோரையும் சிரிக்க வைப்பார். அவர் உள்ளத்தில் கலைஞர் இருப்பது என்னைப் பெரிதும் கவர்ந்த ஒன்றாகும். நாடகத்துறையில் மட்டுமல்ல, சமூகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இன்றைக்கு எஸ்.வி.சேகர் அவர்கள் தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

### சிரிப்பு ‘கேப்சூல்’

அதனால்தான் அந்த விழாவில் கலந்து கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், “மருந்து ‘கேப்சூல்’ போல மக்களுக்கு நல்ல கருத்துகளை எடுத்து வைக்கின்ற விஷயத்தில் எம்.ஆர்.ராதாவிற்குப் பிறகு எஸ்.வி.சேகரைத்தான் நான் காண்கின்றேன்” என்று அன்று பாராட்டினார். 15 ஆண்டுகளைக் கடந்தும், அந்த சிரிப்பு ‘கேப்சூல்’ இன்னும் வீரியத்தோடு பயன்பட்டு வருகிறது.

திரைப்படங்களில், வசனத்தை மறந்துவிட்டால், ‘ரீ-டேக்’ எடுத்து, அந்தத் தவறை திருத்திக்கொள்ள முடியும். ஆனால், நாடகத்தில் அப்படி ‘ரீ-டேக்’ எடுக்க முடியாது. அதனைப் பேசி சமாளித்து, நடித்தாக வேண்டும். நாடகத்தில் சிறிய தவறு செய்தாலும் அது காட்டிக் கொடுத்துவிடும்.

நாடகத்தில் நடிப்பது எவ்வளவு சிரமம் என்பதும், நாடகத்தை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதும் எனக்கு தெரியும். ஏனென்றால்,

1971-ல், அதற்குப் பிறகு நான் 1989-ல் தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் நடத்தியிருக்கிறேன். “முரசே முழங்கு”, “திண்டுக்கல் தீர்ப்பு”, ‘வெற்றி நமதே’ ஆகிய மூன்று நாடகங்களை நடத்தியிருக்கிறேன். அதற்குப் பிறகு சின்னத்திரையில், ‘குறிஞ்சி மலர்’, ‘சூர்யா’ ஆகிய நாடகங்களில் நடித்திருக்கிறேன். பிறகு ‘ஒரே இரத்தம்’ என்ற திரைப்படத்திலும் நடித்திருக்கிறேன். எனக்கு நடிப்பில் அனுபவம் உண்டு. ஒவ்வொரு முறையும் நாடக அரங்கேற்றம் என்பது ஒரு பிரசவ வேதனை மாதிரி. ஏனென்றால், ஒரு ஊரில், ஒரு முறை நாடகத்தை அரங்கேற்றினால் அது வெற்றி பெற்றுவிடும். ஆனால், அடுத்த ஊருக்குப் போகும்போது அது வெற்றி பெறுமா? என்ற சந்தேகம் ஏற்படும். அந்த அளவிற்குதான் நாடகத்தை நாம் நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில், அப்படிப்பட்ட துறையில் 7000வது நாடகத்தை எஸ்.வி.சேகர் நடத்துகிறார் என்றால், அதற்கு ஒரு பெரிய திறமை வேண்டும். திறமைபடைத்தவராக எஸ்.வி.சேகர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். இது ஒரு மிகப் பெரிய சாதனை. அப்படிப்பட்ட சாதனையைச் செய்து வெற்றி பெற்றிருக்கிறார் நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்கள்!

அவருடைய இந்த வெற்றி என்பது, அவரது கலைத்திறமைக்கான வெற்றி! கலைப் பணிகளுக்கான வெற்றி! நாடகம், கூத்து, சினிமா, டி.வி. சீரியல், வெப் சீரியல் என்று கலையின் வடிவங்கள் மாறலாமேயொழிய, எந்தக் கலையாக இருந்தாலும், எந்த ஊடகமாக இருந்தாலும், அதில் சிறந்த சிந்தனையும், அழகிய கலைநயமும் இருந்தால் அவற்றை எவராலும் வெல்ல முடியாது.

எஸ்.வி.சேகர் அவர்களுக்கு என்று ஒரு தனி ரசிகர் கூட்டம் இருக்கிறது. அதை அவரால் தக்க வைத்துக்கொள்ள முடிகிறது. அப்படித்தான் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும். அப்படிச் செயல்பட்டால்தான் நாடகக் கலை காப்பற்றப்படும்.

நம்முடைய எஸ்.வி.சேகர் அவர்கள் 1960 முதல் நடிகராக, இயக்குநராக, தயாரிப்பாளராக இயங்கிக் கொண்டிருக்கிறார். இத்தனை ஆண்டு கலைப் பயணத்தில் அவர் எத்தனையோ பேரைப் பார்த்திருப்பார். எத்தனையோ போட்டிகளைச் சந்தித்திருப்பார். எத்தனையோ நெருக்கடிகளைச் சமாளித்திருப்பார். அத்தனையையும் மீறி கலைப் பணி ஆற்றிய காரணத்தினால்தான் அவரை நாம் இன்றைக்குக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கும் எதைப் பற்றியும் கவலைப்படாமல், தான் சார்ந்திருக்கக்கூடிய கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களை துணிச்சலோடு விமர்சனம் செய்கின்ற ஆற்றல் எஸ்.வி.சேகர் அவர்களுக்குத்தான் உண்டு. அதைத் தொடர்ந்து இன்றைக்கு ‘சோசியல் மீடியா’விலும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவர் பேசுகிறபோது கோரிக்கை ஒன்றை வைத்தார். அவர் தந்தை வாழ்ந்த மயிலாப்பூர் பகுதியில் இருக்கக்கூடிய தெருவிற்கு அவருடைய தந்தையாரின் பெயரை வைக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். நிச்சயமாக, உறுதியாக அந்தப் பெயர் விரைவில் மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, அந்தப் பெயர் நிச்சயமாக விரைவில் சூட்டப்படும், சூட்டப்படும் என்று எஸ்.வி.சேகர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வைத்த கோரிக்கையை நான் நிறைவேற்றி இருக்கிறேன். நான் ஏற்கனவே வைத்த கோரிக்கையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.1.2025) சென்னை, ஆழ்வார்பேட்டை, நாரதகான சபாவில் நடைபெற்ற நாடகப்பிரியா குழுவின் 50ஆம் ஆண்டு விழா, நாடகப்பிரியா நிறுவனத் தலைவர் எஸ்.வி.வெங்கட்ராமன் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் நாடகப்பிரியாவின் 7000வது நாடக விழாவில் கலந்து கொண்டு, நாடகப்பிரியா நாடகக் குழுவின் தலைவர் எஸ்.வி.சேகர் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், எஸ்.வி.சேகர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணைநல்லூர் மேற்கு ஒன்றியம், மேலமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் வனத்துறை அமைச்சர் க.பொன்முடி கலந்துகொண்டு பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் தயா இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு விசுவநாதன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம்சிவசக்தி வேல், மாவட்டப் பிரதிநிதிகள் கிருஷ்ணமூர்த்தி, சடகோபன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



அ.தி.மு.க.வைச் சார்ந்த செந்தில் முருகன் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் உள்ளார்.